# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 194/ந/2017

ஆணை எண். 02/2018

நாள் : 03/01/2018

திரு கே. குணசேகரன்,
மேட்டூர் அனை.

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
சேலம்.

– **எதிர் மனுதாரர்**

சேலம், மேட்டூர் அணை –1, பெரியண்ணன் நகர், கதவு எண்.11–ஏ/46, முகவரியில் வசிக்கும் திரு K. குணசேகரன் அவர்களின் 05.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2017 அன்று பெறப்பட்டு, 194/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மேட்டூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம், மேட்டூர் அணை –1, பெரியண்ணன் நகர், கதவு எண்.11–ஏ/46, முகவரியில் வசிக்கும் திரு K. குணசேகரன் என்பவர் தனக்கு மேட்டூர் நகராட்சியில் 1994–95 ஆண்டு முதல் இன்றைய நாள் வரை வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை மற்றும் 6–வது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகைக்கான வட்டி ரூ.5,455/– வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து மேட்டூர் நகராட்சி ஆணையர் தனது 05.12.2017 நாளிட்ட கடிதத்தில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்குறிப்பிட்ட அறிக்கையில் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய சேமநலநிதிக்கான வட்டித் தொகை ரூ.30,246/–ஐ 15.12.2007 நாளிட்ட காசோலை எண்.239312, மூலம் வழங்கப்பட்டு விட்டதெனத் தெரிவித்துள்ளார். எனினும், முறையீட்டு மனுதாரர் தனது 28.12.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் சேமநலநிதிக்கான வட்டித் தொகை 2003–2004 ஆண்டு முடிய மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்குப் பிந்தைய ஆண்டுகளுக்கு நாளது தேதிவரை வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 6–வது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகைக்கான வட்டித் தொகையும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். எனவே, மனுதாரர்

தற்போது தெரிவித்துள்ள கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மேட்டூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இது சம்பந்தமாக மேட்டூர் நகராட்சி ஆணையரை தொடர்பு கொள்ளுமாறு மனுதாரருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், **3–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   மேட்டூர் நகராட்சி,
   சேலம்(இணைப்புடன்).

2. திரு கே. குணசேகரன்,
   கதவு எண்.11/ஏ/46, பெரியண்ணன் நகர்,
   மேட்டூர் அணை– 1.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி